# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.**DEGREE EXAMINATION –**TAMIL LITERATURE**

FOURTH SEMESTER – **APRIL 2018**

**TL 4503– HISTORY OF TAMIL CIVILIZATION & CULTURE**

Date: 09-05-2018 Dept. No. Max. : 100 Marks
Time: 09:00-12:00

**பகுதி - அ (10 x2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. சங்ககாலத்தில் சேரர்களுக்கும் சோழர்களுக்கும் வழங்கிய வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
02. மடலேறுதல் - குறிப்பு வரைக.
03. தென்புலத்தார் என்போர் யாவர்?
04. களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை - விவரிக்க.
05. சங்ககாலத்தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளுள் இரண்டினைச் சுட்டுக.
06. ‘என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு’ - பொருள் தருக.
07. ‘களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே’ - பிற கடன்களைச் சுட்டுக.
08. எயினர் - குறிப்பு வரைக.
09. மார்க்கோபோலோ - குறிப்பு வரைக.
10. பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகப்பணியைக் குறிப்பிடுக.

**பகுதி - ஆ (5 x7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. ‘பண்பாடு அகவளர்ச்சியினையும் நாகரிகம் புறவளர்ச்சியினையும் குறிக்கும்’ - இக்கூற்றினை விவரி.
12. பண்டைத் தமிழரின் உணவுமுறையை விவரி.
13. சங்க காலத்தில் பூம்புகார் நகரம் பெற்றிருந்த சிறப்புகளை விவரி.
14. சங்ககால மகளிர் நிலையை மதிப்பிடுக.
15. தமிழ்ப்பண்பாட்டிற்குச் சமணம் வழங்கிய கொடைகளை விளக்கியுரைக்க.
16. சங்ககாலத்திற்குப்பின் தமிழகத்தில் சாதிகள் வளர்ச்சியுற்ற வகையை விவரி.
17. ஆங்கிலேயரின் ஆட்சி விளைவித்த மாற்றங்களின் வன்மை மென்மைகளை ஆய்க.

**பகுதி - இ (3 x15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. ஐந்திணை சார்ந்த வாழ்வியலின் பல்வகைக் கூறுகளை விவரித்தொரு கட்டுரை வரைக.

**( அல்லது )**

சங்கத்தமிழர் போற்றிய வாழ்வியல் விழுமியங்களை விவரிக்க.

19. தமிழகத்தில் கட்டடக்கலை காலந்தோறும் பெற்றுவளர்ந்த மாற்றங்களைச் சுட்டியொரு கட்டுரை வரைக.

**( அல்லது )**

சங்கத்தமிழரின் சமய நம்பிக்கைகளையும் விழாக்களையும் விவரித்தெழுதுக.

20. சங்ககாலத்திற்குப் பின் தமிழ்ச்சமூகம் பெற்ற சமுதாய, பண்பாட்டு மாற்றங்களை விவரிக்க.

**( அல்லது )**

தமிழக நாட்டுப்புற இலக்கியம் மற்றும் நாட்டுப்புறப் பண்பாட்டின் தனித்தன்மைகளை ஆய்க.

★★★★★★★